# <u>திருமங்கலம் நகராட்சி</u>

## <u>25.02.2021 அன்று நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மானம்</u>

**1)**திருமங்கலம் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் இயங்கும் கணினிகள் மற்றும் வரிவசூல் மையம், சேவை மையம் ஆகியவற்றை இணைத்து புதிதாக எண்ணிக்கைக்கு பிளக்பாய்ண்ட் மற்றும் வயரிங் பணி மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே இப்பணியை மேற்கொள்வதற்கான மதிப்பீட ரூ.92000/—க்கும் இப்பணியை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2344/2020/இ1
**தீர்மானம் எண்.2257: அனுமதிக்கப்பட்டது.**

**2)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் கொசுவினால் பரவும் தொற்று நோய்களை தடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட புழு மற்றும் முதிர்ந்த கொசு ஒழிப்பு மருந்துகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) Abate | - | 100 lit. |
| 2) Phrethrum Ext 2% | - | 60 lit. |
| 3) Tec. Malathiyan | - | 60 lit. |

அ.கு

**1)**அனுமதிக்கலாம்.

**2)**பொது சுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலையில் வாங்க விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2258: அனுமதிக்கப்பட்டது.**

**3)**நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள். 21.09.2009–ன் பிரகாரம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணத்தில் ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் கட்டணத்தில் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2074, நாள். 17.02.2020–ன் பிரகாரம் 2020–21–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விபரப்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | கருங்கல் சல்லி சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1840/– | ரூ. 3890/– | ரூ. 4490/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2860/– | ரூ. 4930/– | ரூ. 5510/– |

தற்பொழுது 2021–22–ம் ஆண்டிற்கு, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்த்தி கீழ்க்கண்டவாறு திருத்திய தொகையினை நிர்ணயம் செய்திடவும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வசூல் செய்யவும் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின்படி புதிய இணைப்புகள் வழங்கவும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | கருங்கல் சல்லி சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1940/– | ரூ. 4090/– | ரூ. 4720/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3010/– | ரூ. 5180/– | ரூ. 5790/– |

**அ.கு:** அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 2346/2012/இ1**
**தீர்மானம் எண்.2259: அனுமதிக்கப்பட்டது.**

**4)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் கீழ்க்காணும் விபரப்படி தெரு விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 x 28W Tube Light | - | 1659 Nos |
| 2. | 4 x 24W CFL | - | 204 Nos |
| 3. | 250 W SV | - | 19 Nos |
| 4. | 180 W LED (Mini mast 3 Nos) | - | 15 Nos |
| 5. | 400W Metal Halide (Highmast 7 Nos) | - | 70 Nos |
| 6. | 25W LED Lamps | - | 109 Nos |
| | Total | - | 2076 Nos |

மேற்காணும் தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு செய்து வரும் பணிக்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாகம் ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க. எண்.

**29045/2019/டிஒ2,** நாள். **24.01.2020–**ம் தேதிய கடிதத்தில் ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு சடையாண்டி இண்டஸ்ட்ரீஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் நிறுவனம் மூலம் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களின் மேற்காணும் தேதிய அனுமதி கடிதத்தின் நிபந்தனைகளில் **24.01.2020–**ம் தேதிய அனுமதி கடிதத்தில் ESCO நிறுவனம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் நிலை ஏற்படின் நடப்பில் உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை இரத்து செய்து கொள்ளவும் மற்றும் ஒப்பந்ததாரர் கோரிக்கையின் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய அனுமதி பெற்று இரண்டு ஆண்டுகளுக்கு காலநீட்டிப்பு செய்து கொள்வதற்கு நிபந்தனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்காணும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **06.04.2021** அன்று முடிவடைய உள்ளது.

இந்நிலையில் தற்போது இந்நகராட்சியின் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் சடையாண்டி இண்டஸ்ட்ரீஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் தனது **08.02.2021**ம் தேதிய கடிதத்தில் தனது ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து தர கேரிரியுள்ளதால் இந்நிறுவனம் மூலம் மேலும் இரண்டு ஆண்டு (அல்லது) ESCO நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்திடும் வரை ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதப்படி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான உத்தேச தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.**28.31** இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.</u>

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் இரண்டு ஆண்டு காலத்திற்கு காலநீட்டிப்பு செய்திட உரிய பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், வரவு செலவு திட்டத்தில் உரிய ஒதுக்கீடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 2160/2019/இ1

**தீர்மானம் எண்.2260:** அனுமதிக்கப்பட்டது.

**5)**திருமங்கலம் நகராட்சி **2021–2022–**ம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் ரூ. **8,50,000** மதிப்பீட்டில் நகராட்சி மின்கலன் வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிக்கு தேவையான உதிரி சாமான்கள் விநியோகம் செய்து வருடாந்திர பராமரிப்புப் பணி மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி நாள். **12.01.2021**ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு **12.02.2021–**ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு

1) Jeyam Equipments & Engineering Works, Tiruppur — விலை விகிதம் ரூ.**6,48,715**
2) UNS & RICKSHAW Tiruppur — விலை விகிதம் ரூ.**7,96,535**

<u>அ.கு.</u>

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள Jeyam Equipments & Engineering Works அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 75/2021/ இ1

**தீர்மானம் எண்.2261: அனுமதிக்கப்பட்டது.**

**6)**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**25160/2020**/பி4, நாள். **29.01.2021–**ன்படி இந்நகராட்சிக்கு**15**வது மத்திய நிதிக்குழு மானிய நிதி **2020–21**ன் கீழ் ரூ.**29.00** இலட்சம் மதிப்பீட்டில் Hydraulic Backhoe Loader (JCB-3DX) விநியோகம் செய்வதற்கு **24.02.2021–**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களின் வெளியீட்டு ஆணை எண். **859**/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் **2021**, நாள். **05.02.2021–**ன்படி Financial Express ஆங்கில நாளிதழ் மற்றும் மாலை மலர் தமிழ் நாளிதழில் தமிழ்நாடு பதிப்புகளில் விளம்பரம் செய்ய Flame Advertising Company Pvt Ltd - Chennai நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டு மேற்படி நாளிதழ்களில் **05.02.2021** அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்டவாறு விளம்பரம் செய்ததற்கான விளம்பரக்கட்டணம் ரூ. **19,635/–** மட்டும் வழங்க. Invoice No.P/542/Feb-2021, நாள். **06.02.2021** Flame Advertising Company Pvt Ltd - Chennai மூலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர கட்டணத்தை Flame Advertising Company Pvt Ltd - Chennai நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**

**1.** மன்றம் அனுமதிக்காலம்.

2. மேற்கண்ட விளம்பர கட்டண செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.75/2021/இ1

**தீர்மானம் எண்.2262: அனுமதிக்கப்பட்டது.**

7)நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20557/2020/இ3, நாள். 14.12.2020–ன்படி இந்நகராட்சியில் சிறப்பு சாலைத் திட்டம் (SRP) 2020–21–ன்கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு 12.01.2021–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 4945/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் 2020, நாள். 23.12.2020–ன்படி நமது புரட்சி தலைவி அம்மா தமிழ் நாளிதழ் மற்றும் இந்து ஆங்கில நாளிதழில் தமிழ்நாடு பதிப்புகளில் விளம்பரம் செய்ய Flame Advertising Company Pvt Ltd - Chennai நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டு மேற்படி நாளிதழ்களில் 24.12.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்டவாறு விளம்பரம் செய்ததற்கான விளம்பரக்கட்டணம் ரூ.1,41,960/– மட்டும் வழங்க Invoice No.P/294/Dec-2020, நாள். 24.12.2020 Flame Advertising Company Pvt Ltd - Chennai மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர கட்டணத்தை Flame Advertising Company Pvt Ltd - Chennai நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்கண்ட விளம்பர கட்டண செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2690/2020/இ1

**தீர்மானம் எண்.2263: அனுமதிக்கப்பட்டது.**

8)திருமங்கலம் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21ன் கீழ் ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் Hydraulic Backhoe Loader (JCB-3DX) வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.25160/2020/பி4, நாள். 29.01.2021–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 24.02.2021–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் M/s.Jayaraj Automobile Agency, Madurai மற்றும் JCB India Limited, Chennai ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியார்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 25.02.2021–ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. M/s.Jayaraj Automobile Agency, Madurai. | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.17 சதவீதம் குறைவு |
| 2. JCB India Limited, Chennai, | மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.72 சதவீதம் அதிகம் |

மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியில், மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்த விலைவிகிதம் கொடுத்துள்ள M/s.Jayaraj Automobile Agency,Madurai நிறுவனம் மூலம் வாகனம் வாங்கிக் கொள்ளலாம். தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

பணியின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.75//2021/இ1**

**தீர்மானம் எண்.2264: அனுமதிக்கப்பட்டது.**

9)திருமங்கலம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் ரூ. 6.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.20 உத்தண்டன் தெருவில் பாதாளசாக்கடை தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.2221 நாள்.13.11.2020 அனுமதி அளித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 12.02.2021–ம் தேதி இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு

1) திரு.சி.ஜெயச்சந்திரன்,ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.08% குறைவு
2) திரு.எம்.கருப்பையா,ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.12% கூடுதல்

<u>அ.கு.</u>

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 2213/2020/ இ1**
**தீர்மானம் எண்.2265: அனுமதிக்கப்பட்டது.**

10)மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் & பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண் 2237/2020/டி2 நாள்.29.12.2020ல் நிர்வாக அனுமதியின் படி மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் திருமங்கலம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2020–21ன் கீழ் ரூ. 5,00,000 மதிப்பீட்டில் திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு 04.02.2021ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு

1) திரு. எம்.கருப்பையா, ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.09% குறைவு.
2) திரு. சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.36% அதிகம்

<u>அ.கு.</u>

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.09% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம்.கருப்பையா, திருமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3016/2020/இ1**
**தீர்மானம் எண்.2266: அனுமதிக்கப்பட்டது.**

11)மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் & பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண் 2237/2020/டி2 நாள்.29.12.2020ல் நிர்வாக அனுமதியின் படி மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் திருமங்கலம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2020–21ன் கீழ் ரூ. 5,00,000 மதிப்பீட்டில் திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் வளைவு நுழைவாயில் அமைக்கும் பணிக்கு 04.02.2021ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம்
பின்வருமாறு

1) திரு. எம்.கருப்பையா, ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.25% குறைவு.
2) திரு. சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.37% அதிகம்

அ.கு.

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.25% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம்.கருப்பையா, திருமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 3016/2020/இ1

**தீர்மானம் எண்.2267: அனுமதிக்கப்பட்டது.**

12)மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் & பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண் 2237/2020/டி2 நாள்.29.12.2020ல் நிர்வாக அனுமதியின் படி மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் திருமங்கலம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2020–21ன் கீழ் ரூ.15,00,000 மதிப்பீட்டில் திருமங்கலம் சந்தைப்பேட்டையில் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிக்கு 16.02.2021ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம்
பின்வருமாறு

1) திரு. எம்.கருப்பையா, ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.17% குறைவு.
2) திரு. சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர்
திருமங்கலம் — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.25% அதிகம்

அ.கு.

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.கருப்பையா, திருமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 3016/2020/இ1
**தீர்மானம் எண்.2268: அனுமதிக்கப்பட்டது.**

13)திருமங்கலம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் ரூ. 92,000 மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக UPS பிளக் பாய்ன்ட் வயரிங் பணி மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி நாள். 22.01.2021 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 23.02.2021–ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு

1) Victory System Service
சிவகாசி — மதிப்பீடு.ரூ.89,500
2) Gunuine Computers
சிவகாசி — மதிப்பீடு.ரூ.92,000

<u>அ.கு.</u>

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Victory System Service சிவகாசி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2344/2020/ இ1
**தீர்மானம் எண்.2269: அனுமதிக்கப்பட்டது.**

14)திருமங்கலம் நகராட்சி பகுதிகள் அமைந்துள்ள 13 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து 13 மண்டலங்களாக (Zone) பிரிக்கப்பட்டு சுமார் 69 எண்ணிக்கையுள்ள குடிநீர் வால்வுகள் மூலம் காலை மற்றும் மாலை வேளைகளில் தினசரி இந்நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் வால்வினை திறந்து மூடுவதற்கு நிரந்தர பணியாளர் TURN COCK ஒருவர் மட்டுமே உள்ள நிலையில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது முற்றிலும் சிரமமாக உள்ளது. மேலும், மேற்காணும் மேல்நிலைத் தொட்டிகளை சீரான கால இடைவெளியில் சுத்தம் செய்வதற்கும், நீரேற்றம் செய்வதற்கும், குடிநீர் மேல்நிலைத் தொட்டியின் பாதுகாப்பிற்கும் போதிய பணியாளர்கள் இல்லை. இதே போன்று சோழவந்தான் தலைமை குடிநீரேற்று நிலையத்தில் மின் மோட்டார்களை இயக்குவதற்கு மின் பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது.

எனவே, மேற்காணும் குடிநீர் வால்வு திறந்து மூடுவதற்கும், குடிநீர் மேல்நிலைத் தொட்டி சுத்தம் செய்வது மற்றும் பாதுகாத்தல், சோழவந்தான் தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார் இயக்குதல் ஆகிய பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. குடிநீர் வால்வு திறப்பாளர் (TURN COCK) | – | 2 Nos |
| 2. குடிநீர் மேல்நிலைத் தொட்டி சுத்தம் செய்தல், காவலர் பணி | – | 2 Nos |
| 3. தலைமை நீரேற்று நிலைய மின் பணியாளர் | – | 1 No |

மேற்கண்டவாறு 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.70 இலட்சத்திற்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.865/2021/இ1

**தீர்மானம் எண்.2270: அனுமதிக்கப்பட்டது.**

15) திருமங்கலம் நகர்ப்பகுதிக்கு காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் சோழவந்தான் தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் மூலம் குடிநீர் பெறப்பட்டு இந்நகரில் அமைந்துள்ள 13 எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் குடிநீர் விநியோகத்திற்கான சுமார் 59கி.மீ நீளமுள்ள பகிர்மானக்குழாய் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் நீரேற்றம் செய்யும் பிரதானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்பு மற்றும் அடைப்பினை சரி செய்ய போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் 01.04.2021 முதல் 31.03.2022 வரை குடிநீர்க் குழாய்களில் ஏற்படும் பழுதினை சரிசெய்து பொதுமக்களுக்கு தடங்கல் இன்றி சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கான ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு ரூ.8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.குடிநீப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.99/2021/இ1

**தீர்மானம் எண்.2271: அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருமங்கலம்.